நெடிய பயணம்

சென்ற *ஒரு பேப்பர்* இல் திரைப்பட இயக்குனர் பாலு மகேந்திராவை, அவர் ஆளுமையை எழுதினேன். அதில் விடுபட்டுப்போன (இடமில்லாமல்) சில குறிப்புக்களை இதிலும் தொடலாம்.

பாலுமகேந்திரா எம்முன் வந்தமர்ந்தார். தளர்ந்த நடை எனக்குக் கொஞ்சம் கவலை தந்தது. 1984இல் பார்த்த பாலுமகேந்திராவாக இல்லை. ஆனால் ஒன்றையும் ஒப்புக் கொள்ள வேண்டும். இருபது வருடங்கள் கழித்துக் காண்கிறேன். இருபது வருடங்கள் என்பது வெறும் காலம் அல்ல, வெகுகாலம். பாலுமகேந்திரா கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்ததுதான் சாடையான உறுத்தலாக இருந்தது. அது உணர்வுகளை மறைத்துவிடும்.

84இல் அப்படி அல்ல. அவர் மனசார, உணர்வு பூர்வமாக ஒன்றித்துக் கதைத்தார். உடல் மொழியாலும் வாய் வார்த்தையாலும் கண்கள் ஒளிரவும் மனம் நிறைந்து போய்க் கதைத்தார். அவரைச் சந்தித்தது, கதைத்தது எல்லாம் என் பாக்கியம் என்று கூட இருந்தது.

அப்போது ஒன்று சொன்னார். முள்ளும் மலரும் திரைப்படத்தினை மகேந்திரன் இயக்கியபோதும், தன் பங்கே அதில் அதிகம் என்றார். அதாவது ஒளிப்பதிவு மாத்திரம் தன் பணியாகக் கருதாமல் இயக்குவதிலும், இயக்குவது எப்படி என்று மகேந்திரனுக்குச் சொல்லிக் கொடுப்பதிலும் ஈடுபட்டேன் என்றார். மணிரத்தினத்தின் முதல் படமான 'பல்லவி அனுபல்லவி' (1982, கன்னடம்) திரைப்படத்தின் ஒளிப்பதிவாளராக பாலுமகேந்திரா கடமையாற்றினார். அத்திரைப்படத்திலும் மணிரத்தினம் இயக்குவதற்கு பாலுமகேந்திரா கற்றுக் கொடுத்தார் என்று சொல்லப்பட்டது.

இப்படிக் கதைத்தது எவை பற்றியும் பாலுமகேந்திராவுக்கு ஞாபகம் இல்லை. இருதய நோயாலும், முடக்கு வாதத்தாலும் பாதிக்கப்பட்டிருந்தார். ஆனால் நான் இவை பற்றியெல்லாம் கதைத்தது அவருக்கு ஆச்சரியத்தையும் மகிழ்வையும் தந்தன.

தொடர்ந்த எங்கள் உரையாடல் அவருள் இருந்த இறுக்கத்தைத் தளர்த்தியது. கறுப்புக் கண்ணாடியைக் கழற்றி வெறும் கண்ணாடி அணிந்தார். உணர்வுபூர்வமான உரையாடலை அது தந்தது. ஈழப்போராட்டம் தொடர்பான ஆழ்ந்த அக்கறையுடன் கதைத்தார். மாணவப் பராயத்தில் (50களின் இறுதி) காசி ஆனந்தனுடன் சேர்ந்து மட்டக்களப்பு நகரில் நடாத்திய சிறு சிறு போராட்டங்களை நினைவு கூர்ந்தார். அவை பற்றிச் சொல்கிறபோது அவரது கண்கள் மிக அதிகமாக ஒளிர்ந்தன. இன்னும் மனமார்ந்த ஈடுபாட்டுடன் அவர் இருந்தார்.

அவரிடம் எங்கள் தேவை திரைப்படம் தொடர்பாக இருந்தது. ஈழத்துத் தமிழ்திரைப்படங்களுக்கான தேடலுக்கு அவரது பங்களிப்பு எவ்வாறு அமையும் என்பதே எங்கள் நோக்கமாக இருந்தது. என்ன செய்யலாம், என்ன செய்ய வேண்டும் என்று கேள்விகளை எங்களிடம் விட்டார்.

அவரது திரைப்பட ஆக்கங்கள் குறித்து நாங்கள் பேசிக் கொண்டோம். கவனத்திற் கொள்ளத்தக்க முக்கியமான அவரது திரைப்படங்களை நான் வரிசையிட்டேன். கோகிலா (கன்னடம்), அழியாக கோலங்கள், மூன்றாம் பிறை, யாத்ரா (மலையாளம்) ஓளங்கள் (மலையாளம்), வீடு, சந்தியாராகம் இதில் கறுப்பு வெள்ளையில் வெளியான ஷோபா, கமல்காசன் நடித்த பாலுமகேந்திராவின் முதற்படமான 'கோகிலா'வை நான் பார்க்கவில்லை.

பாலுமகேந்திராவின் ஒளிப்பதிவு ஒரு ஓவியம். கதை நகரும் விதம் மிக நேர்த்தி. மேலாக திரைப்படங்களுக்கு வைக்கப்படும் தலைப்பு கவிதையாய் மிளிரும். கோகிலா என்பது குயிலைக் குறித்த ஒரு சொல். வசந்தத்தில் குயில் கூவும். ஓர் இளைஞனின் இதயத்தில் வசந்தகாலமென வருகிறாள் ஒரு பெண். அவள் பெயர் கோகிலா.

மனிதனால் இடப்பட்ட கோலங்கள் பொதுவில் அழிவன. பதின்ம வயதில் (teenage) காலம் இட்ட கோலங்கள் ஒருபோதும் அழிவதில்லை. அதுவே அழியாத கோலங்கள். ஒரு சிறுவனின் மனதில் தாய்க்கு நேர்ந்த அவலம் மூடிப்போய்க் கிடக்கிறது. அவன் பெரியவனானதும் அது சிறு மனநிலைப் பிறழ்வாக வெளிப்படுகிறது. அது எப்படி இருக்கிறது? 'மூடுபனி'யாக

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

மூன்றாம்பிறை கண்ணுக்குத் தெரிவதல்ல. அவ்வளவு சிறிது. அது சிறிது நேரமே மேற்கு வானில் நிற்கும். அதுவும் சூரிய வெளிச்சம் முற்றாக மறையாத நேரம். மூன்றாம் பிறை தோன்றி அழகுகாட்டி உடன் மறையும். ஓர் இளைஞனிடம் ஒருத்தி வருகிறாள் அழகையும் அன்பையும் கொட்டுகிறாள். அவன் திகைத்துத் திணறி திரும்புவதற்கிடையில் அவள் மறைகிறாள். அதுமூன்றாம் பிறை. சிறுதிரை அல்லது தண்ணீரின் தளம்பலுக்கு மலையாளத்தில் ஓளங்கள் என்று பெயர். ஒரு கணவன் தன் வாழ்க்கையில் வேறொரு பெண்ணிடம் ஒரு முறை தவறிவிட்டான். 'ஓளங்கள்' திரைப்படம் சொன்ன கதை அது. ஒருவனின் நெடிய பயணம் 'யாத்ரா'

பொழுதுசாயும் நேரம் வாசிக்கப்படும் இராகம் சந்தியா ராகம் ஒரு மனிதனின் வாழ்நாள் பொழுது சாயும் காலம் கிழப்பருவம். மனைவியை (கிழவியை) இழந்த கிழவனின் அல்லல்பாடுகளைச் சொன்னது 'சந்தியாராகம்'

பாலுமகேந்திரா வெறும் இயக்குனர் அல்லர், கவித்துவம் மிகுந்த ஆளுமை அவர். அது அவர் திரைப்படங்களில் தெரிந்தது. கமல்காசனுக்கும் (மூன்றாம்பிறை) மம்முட்டிக்கும் (யாத்ரா) இந்தியாவின் சிறந்த நடிகர் என்ற விருதை வாங்கிக் கொடுத்திருந்தார். சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருதையும் இரண்டு முறை (கோகிலா, மூன்றாம்பிறை) பெற்றிருந்தார். இந்தியாவின் சிறந்த நடிகை என்ற விருதை அர்ச்சனாவுக்கு (வீடு) வாங்கிக் கொடுத்திருந்தார்.

மேலும் கதையாடலில் நான் ஒன்று சொன்னேன். 'மூன்றாம்பிறை', 'யாத்ரா', 'சந்தியா ராகம்' மூன்றும் முக்கியமான படங்கள் என்றேன். அவர் 'வீடு' படத்தை அதில் சேர்க்க வேண்டும் என்றார் மற்றும் மூன்றாம் பிறையை பாமரர்கள் அதிகம் இரசிக்கிறார்கள் (அல்லது பாமரத்தனமான இரசனை) என்றார்.

நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை. 'வீடு' திரைப்படம் 'ஆழமான' ஒன்றைச் சொல்லவில்லை. திரைக்கதை மிக இலேசானது. யதார்த்தமான கதையும் இயல்பான நடிப்பும், தேர்ந்த ஒளிப்பதிவும் அளவான தொகுப்பும் (editing) மிகச் சிறந்த திரைப்படத்துக்கான தகுதிகள் என்று நான் நம்பவில்லை. உள்ளார்ந்து ஒன்றைச் சொல்ல வேண்டும். பார்ப்போரை பரவசம் கொள்ள வைக்க வேண்டும். திரைப்படம் முடிந்து எழுந்து வருவோரை 'ஏதோ செய்யுது' என்ற சொல்ல வைக்க வேண்டும்.

அப்படிச் சொல்ல வைத்த திரைப்படம் 'மூன்றாம் பிறை' தமிழிழ் நான் பார்த்த முதற் சிறந்த பதினைந்து திரைப்படங்களில் 'மூன்றாம் பிறை'யும் ஒன்றெனச் சொல்வேன். அத்திரைப்படத்தில் தொகுப்பாளர்தான் தன் கடமையில் சற்று நழுவியிருந்தார். 'பாமரரசனை'க்கென பாலுமகேந்திரா வைத்திருந்த 'சில்க்ஸ்மிதா' சம்பந்தப்பட்ட காட்சிகளை ஈவிரக்கமில்லாமல் வெட்டி எறிந்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தாலும் படம் வெற்றி பெற்றிருக்கும். இரண்டு திரைப்படங்கள் பற்றி இதில் எழுதிய முழுமையையும் நான் அவரிடம் சொல்லவில்லை.

பிறகும் நாங்கள் இரண்டு முறை அவரைச் சந்தித்தோம். ஒருமுறை நாங்கள் அவரிடம் போனோம் மறுமுறை அவர் எங்களிடம் வந்தார். அவரைச் சந்தித்த இருமுறையும் அவர் கறுப்புக் கண்ணாடி அணிந்திருக்கவில்லை.

பழங்கள்ளு

சும்மா இருந்தால் இருந்தேன். ஏழுந்தேனாயின்?

வழுதி

(ஒரு பேப்பருக்காக)

அது ஒரு கொடுங் காலம். பஞ்சப் பாட்டுப் பாடி புலவர் பவனி வந்த காலம். ஒரு கவளம் சொற்றக்கு நாள் தோறும் நடந்து இரு கை ஏந்தி இரந்த காலம்.

மூவேந்தும் அற்று முடி அற்று சங்கமும் போய்
பதின் மூன்றொடு எட்டுக்
கோவேந்தருமற்று மற்றொரு வேந்தன்
கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்
பஞ்சாகப் பறக்கிற'

காலம் அது (சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தரும் அழிந்து தமிழ் வளர்த்த சங்கமும் அழிந்து போய் இருபத்தொரு வள்ளல்களும் இறந்து போய் வேறெந்த வேந்தரும் தருமம் செய்யாமல் இருக்கும் இந் நாளில் புலவர்கள் காற்றில அலைபட்ட இலவம் பஞ்சாகப் பறக்கின்ற காலமிது.)

இக்காலத்தை நாயக்கர் காலமென்று தமிழ் இலக்கிய வரலாறு சொல்லும். தமிழர் வரலாற்றை பொதுவில் இவ்வாறு வகுப்பார். சங்க காலம் (கி.பி 3ம் நூற்றாண்டு வரை) சங்க மருவிய காலம் (கி.பி 3- 6ம் நூற். வரை) பல்லவர் காலம் (கி.பி 6- 9ம் நூற். வரை) சோழர் காலம்? (கி.பி 9- 13ம் நூற். வரை) நாயக்கர் காலம்? (கி.பி 14 - 15ம் நூற். வரை) ஐரோப்பியர் காலம்? (கி.பி 16- 18ம் நூற். வரை)

இவ்வாறான வகைப்பாட்டில் நாயக்கர் காலம் 14,15ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. சுமார் 14ம் நூற்றாண்டு வரை தமிழ் மண்ணை தமிழ் மன்னர்களே ஆண்டனர். நாயக்கர் காலத்திலேயே வேற்று நாட்டு மன்னர்கள் தமிழ் மண்ணை ஆண்டனர். அதாவது விஜய நகரத்திலிருந்து வந்த தெலுங்கு மன்னர்களான நாயக்கர்கள் தமிழ் நிலத்தை ஆண்டனர்.

தமிழர் தமிழ் தேசத்தை ஆண்ட போது எட்டுத் தொகை பத்துப் பாட்டு என்ற பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும் திருக்குறள் என்ற ஒப்பற்ற இலக்கியமும் சிலப்பதிகாரம் மணிமேகலை முதலான ஐம்பெரும் காப்பியங்களும் தேவார திருவாசகங்களும் ஆழ்வார் பாசுரங்களும் கம்பராமாயணம் பெரிய புராணம் என்ற காவியங்களும் தமிழன்னையிடம் இருந்தன என்றால் அது தமிழர் ஆண்ட காலத்தில் தான்.

தமிழர் அல்லாதோர் ஆண்ட காலத்தில் இப்படியொன்றும் எழவில்லை. தல புராணங்களும் நிந்தாஸ்துதிகளும் என்று எழுந்தன. சிலேடை, யமகம், திரிபு,மடக்கு, அந்தாதி என்ற வார்த்தை விளையாட்டுக்களும் இக்காலத்தில் தான் தோன்றின. உவமை உருவகம் தற்குறிப்பேற்றம் உயர்வு நவிற்சி போன்ற வளமிக்க பொருளணிகள் போய் வரட்டுத்தனமான சொல்லணிகள் வந்த காலம் இது

இக்காலத்தில் தோன்றிய ஒரு பெரும் புலவர் தான் காளமேகம். இவர் சோழர் காலத்தில் தோன்றியிருந்தால் கம்பருக்கு நிகராக ஒரு காவியம் பாடியிருப்பார் ஆனால் நாய்க்கர் காலத்தில் பிறந்து விட்டார் காளமேகம். ஆயினும் தனது ஆளுமை தகுதி பற்றிய தன்னம்பிக்கை மிக அதிகமாக காளமேகப் புலவரிடம் காணப்படுகிறது.

இம்மென்னும் முன்னே இருநூறும் முன்னூறும்
அம்மென்றால் ஆயிரமும் பாட்டாகாதோ – சும்மா
இருந்தால் இருந்தேன் எழுந்தேனா யாயின்
பெருங் காளமேகம் பிள்ளாய்

பிள்ளாய்! இம் என்று நீ வாய் திறக்கு முன்னம் இருநூறு முன்னூறு கவிதைகள் பாட மாட்டேனோ, அம் என்று வாயி திறந்து மூடுவதற்குள்ளே ஆயிரம் கவிதைகள் ஆகாதோ? வாய் திறவாமல் சும்மா இருந்தால் இருப்பேன். அன்றில் பாட வேண்டுமென்று எழுந்தேனே என்றால் கருக் கொண்டெழுந்த மேகம் போல (காள மேகம் - கருக் கொண்ட மேகம்) கவி மழை பொழிவேன்.

By Air or **By Sea** Weekly Sailings
TRY US and see the ***difference***

TRICO - *The name you can trust*

இலங்கை உட்பட 28 நாடுகளில் ட்ரைகோ 43 கிளைகள்
கொழும்பு காலி குருநாகலில் எமது சுங்க இணைக் களஞ்சியங்கள்

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்

*Bring your goods and do the packing in our warehouse itself, thereby saving money, **you spend on transporting.***

One T-Chest to **Sri Lanka - Only £10:** Transit Time Only **18 days**
Two T-Chests to **Chennai – Only £85:** Transit Time Only **27 days.**
Two T- Chests to **Cochin – Only £95:** Transit Time Only **27 days.**

Open 6 days a week!

TRICO
T: 020 8888 8787 F: 020 8889 5445
Email: dilan@tricoshipping.com
www.tricoshipping.com
Trico Shipping and Forwarding Ltd.
555 Whitehart Lane, London. N17 7RP